பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
02 08 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 20 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இன்று விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு முடக்குவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் குற்றம் சாட்டியுள்ளார்.
- தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான ஊக்கத் தொகையை தேர்தல் ஆணையம் உயர்த்தியுள்ளது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- 17 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Yashita வெள்ளிப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள்--

பஹல்காம் தாககுதலுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி ஆபரேஷன் சிந்தூர் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் வாரணாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 20 ஆவது தவணைத் தொகையை விடுவித்து அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் – பிரதமர் – 30 செகண்ட்ஸ்)

இன்றைய தினம் 20 ஆயிரத்து 500 கோடி ரூபாயை, 9 கோடியே 70 லட்சம் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

இதற்கிடையே, 20 ஆவது தவணைத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக தமிழகத்தின் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் – விவசாயி – 30 செகண்ட்ஸ்)*

*>><><><<*

*நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு முடக்குவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் குற்றம்சாட்டியுள்ளார்.*

*செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், முக்கிய மசோதாக்கள் மீதான விவாதத்தில் பங்கேற்காமல் எதிர்க்கட்சிக்ள் இதுபோன்ற செயலில் ஈடுபடுவதாக கூறினார்.*

*எதிர்க்கட்சிகளின் இந்த செயல்பாடு ஏற்புடையதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.*

*தேர்தல் ஆணையத்திற்கு எதிராக குற்றம் சாட்டியுள்ள மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, தேர்தல் ஆணையம் பல முறை வாய்ப்பளித்தும் தம்முடைய குறைகளை தெரிவிக்காதது ஏன் என்றும் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் வினவினார்.*

*>><><><<*

*தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்காரி கூறியுள்ளார்.*

*புனேயில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் காரணமாக இது சாத்தியமானது என்று கூறினார்.*

*இதன் காரணமாக இளையோருக்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைப்பதாகவும் திரு நிதின் கட்காரி தெரிவித்தார்.*

*>><><><<*

*Malegaon குண்டுவெடிப்பு சம்பவத்தில் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.*

*ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக தவறான பிரச்சாரத்தில் காங்கிரஸ் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினார்.*

நீதிமன்ற தீர்ப்பின் மூலம் உண்மை வெளிவந்துள்ளதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

>><><><<

ஏழை மக்களுக்கு வீட்டு வசதி கிடைப்பதை தில்லி அரசு உறுதிசெய்யும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஏழை மக்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட குடியிருப்புகள் சேதம் அடைந்துள்ளதாக கூறினார்.

அவற்றை சீரமைப்பதற்கு முந்தைய அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

ஏழை மக்கள் அனைவருக்கும் வீட்டு வசதி கிடைக்க வேண்டும் என்பது பிரதமரின் நோக்கமாகும் என்றும், அதனை தமது அரசு நிறைவேற்றும் என்றும் அவர் கூறினார்.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தில்லி அரசு மேற்கொள்ளும் என்றும் திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

>><><><<

பள்ளி வளாகங்களில் அரசியல் கட்சிகளின் சின்னங்களை வரைய ஆந்திர அரசு தடை விதித்துள்ளது.

பள்ளிக்கல்வித் துறையின் இயக்குநர் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், அரசியல் கட்சிகளின் கொடிகள், சுவரொட்டிகள் போன்றவற்றை பள்ளி வளாகங்களில் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

சாதி அடிப்படையில் தெருக்களுக்கு பெயர் சூட்டுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறு தேசிய மனித உரிமை ஆணையம், மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஊரக வளர்ச்சித் துறையின் முதன்மை செயலர்களுக்கு நோட்டீஸ் அனுப்பபப்பட்டுள்ளது.

சாதி அடிப்படையில் தெருக்களுக்கு பெயர் சூட்டுவது தற்போதும் நீடிப்பதாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் தேசிய மனித உரிமை ஆணையம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

>><><><<

வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான ஊக்கத் தொகையை தேர்தல் ஆணையம் உயர்த்தி உள்ளது.

இதன்படி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான ஊக்கத் தொகை தற்போதுள்ள 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

வாக்காளர் திருத்தப்பட்டியலில் ஈடுபடும் அலுவலர்களுக்கான ஊக்கத் தொகை ஆயிரம் ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாகவும், வாக்குச்சாவடி அலுவலர்களை கண்காணிக்கும் அதிகாரிகளுக்கான ஊக்கத்தொகை 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு உரிய ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள பூங்கா பொதுமக்கள் பார்வையிட வரும் 16 ஆம் தேதி முதல் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த பூங்காவை பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு பணிகளுக்காக திங்கட்கிழமை மட்டும் பூங்கா திறக்கப்பட மாட்டாது என்றும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

*பொதுமக்கள் அடுத்த மாதம் 14 ஆம் தேதி வரை பார்வையிடலாம் என்றும் குடியரசுத் தலைவர் மாளிகையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*>><><><<*

*ஜம்மு கஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.*

*குல்காம் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த உளவுத் தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.*

*அப்போது இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதில் சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதியின் உடலை கைப்பற்றி விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.*

*>><><><<*

*ஜார்க்கண்டில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 3 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.*

*Sahib Ganj மாவட்டத்திற்கு உட்பட்ட ஆற்றில் 32 பேர் சென்று கொண்டிருந்த படகு விபத்துக்குள்ளானதில் 28 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.*

*>><><><<*

*இஸ்ரேலுடன் பாதுகாப்பு தளவாட வர்த்தகத்தில் ஈடுபட ஸ்லோவேனியா தடை விதித்துள்ளது.*

*இதற்கான அறிவிப்பினை அந்நாட்டு பிரதமர் திரு Robert Golob வெளியிட்டார்.*

*>><><><<*

*நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

அசாம், மேகாலயா, மேற்கு வங்கம், சிக்கிம் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று அதி கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் அருணாச்சலப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதி கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கர், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், ஜார்க்கண்ட், கேரளா, நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இருதினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் படிப்படியாக குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

17 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Yashita* வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*Athens*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 61 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கம் வென்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியது.

>><><><<

பிரேசில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Manush Shah – Manav Thakkar* இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 5-11, 11-9, 11-6, 8-11, 11-5 என்ற செட்கணக்கில் சீன தாய்பேயின் *Huang Yan Chang – Kuo Guan Hong* இணையை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் Manush Shah – Diya Chipale இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-7, 11-2, 11-7 என்ற செட்கணக்கில் சிலியின் Nicolas Burgos – Paulina Vega இணையை வென்றது.

>><><><<